**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**
**CC No. 188/2018**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw3/ Pw2 |
| Name | : Subramani |
| Father/Husband's Name | : Kuppusamy |
| Village | : |
| Taluk | : Thirukachur |
| Calling | : |
| Age | : 52 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09.03.2026.

**Accused absent.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது திருக்கச்சூரில் வசித்து வெல்டிங் வேலை செய்து வருகிறேன். கடந்த 2017ம் வருடம் தேதி, மாதம் ஞாபகமில்லை, ஒரு நாள், இரவு 7.00 மணியளவில் சிங்கபெருமாள் கோவிலில் இருக்கும் அமுல் பேட்டரி கடையின் எதிரே செங்கல்பட்டியிலிருந்து தாம்பரம் நோக்கி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் அரசு என்கிற பாபு இடது புறத்திலிருந்து வலது புறம் சாலையை கடக்க முயன்ற போது, தாம்பரத்தை நோக்கி செல்லும் கார் ஒன்று அவர் மீது மோதியது. உடனே அங்கிருந்தவர்கள் 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து, காயப்பட்ட நபரை செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அதன் பிறகு நான் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். காயப்பட்ட நபருக்கு பின் தலையில் காயமும், ஒரு கால் உடைந்துவிட்டதாக சொன்னார்கள். மறுநாள் விடியற்காலையில் அவர் இறந்துவிட்டதாக தகவல் கிடைத்தது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை:**

நான் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டேனா என்றால் உடற்கூராய்வு சம்பந்தமாக கையெழுத்து போட்டேன். எத்தனை கையெழுத்து போட்டேன் என்று எனக்கு ஞாபகமில்லை.

மறு விசாரணை இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu.